## முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.

2025ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19–ம் தேதி பிரதிவாதி தரப்பு சாட்சி பி.வா.சா.1–ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(வாதி ஆஜர். 3ம் பிரதிவாதி ஆஜர். 1ம் பிரதிவாதி ஆஜர் இல்லை. வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்)

அ.வ.எண்.1250/2021

பி.வா.சா.1 பழனிசாமி, த/பெ பெரியசாமி

<u>வாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

1. ராமண்ணகவுண்டருக்கு பெரியசாமி, முத்துசாமி என இரு வாரிசுகள் உள்ளார்கள் என்றால் சரிதான். ராமண்ணகவுண்டர் இறந்து 30 வருடங்கள் ஆகிறது. பெரியசாமியின் மனைவி பெயர் வள்ளியம்மாள் ஆவார். பெரியசாமி, வள்ளியம்மாளுக்கு நானும், வாதியும் வாரிசுகள் என்றால் சரிதான்.

2. 1ம் பிரதிவாதி யுகேஷ் என்பவர் வாதியின் மகன் ஆவார். முத்துசாமியின் மகள் தான் 2வது பிரதிவாதி ஆவார். பெரியசாமி 17.10.2001ல் இறந்ததாக வாதி இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். என் தாயார் வள்ளியம்மாள் தற்போதைய தேதியிலிருந்து 7 மாதத்திற்கு முன்பு இறந்துவிட்டார்.

3. ராமண்ணகவுண்டர் பி.வா.சா.ஆ.1ன்படி மொத்தம் 37 செண்ட் கிரயம் பெற்றார் என்று சொன்னால் சரிதான். 10.09.1970 தேதிய கிரய சாசனப்படி வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2 ஆவணங்களின்படி முத்துசாமிகவுண்டர் மற்றும் பெரியசாமிகவுண்டரும் சேர்ந்து பொதுவில் 37 செண்ட் விஸ்தீரணமுள்ள பூமியை கிரயம் பெற்றார்கள் என்றால் சரிதான். 11.07.1983 தேதியில் வா.சா.ஆ.2 மற்றும் பி.வா.சா.ஆ.3 ஆவணமான பாகபிரிவினை பத்திரப்படி பெரியசாமியும், முத்துசாமியும் பாகப்பிரிவினை ஏற்படுத்திக் கொண்டார்கள் என்றால் சரிதான்.

4. மேற்கண்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் ஏ அட்டவணை சொத்துக்கள் பெரியசாமிக்கும், பி அட்டவணை சொத்துக்கள் முத்துசாமிக்கும்

ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். ஏ அட்டவணையில் பெரியசேமூர் கிராமம் ரீ.ச.எண்.44/16 காலையில் 16 செண்ட் விஸ்தீரண பூமி மட்டும் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி அட்டவணை சொத்தில் பெரியசேமூர் கிராமம் ரீ.ச.எண்.44/16 காலையில் 6 3/4 செண்டும் மற்றும் 9 1/4 செண்டும் ஆக மொத்தம் 16 செண்ட் முத்துசாமிக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

5. 11.07.1983 பாகப்பத்திரத்திற்கு பிறகு எனக்கும், வாதிக்கும் மற்றும் 2ம் பிரதிவாதிக்கும் எழுத்துமூலமான பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை எதுவும் ஏற்படவில்லை என்றால் சரிதான். 01.01.2003 தேதியில் எனக்கும், வாதி கணேசனுக்கும், முத்துசாமிக்கும் பாத்தியப்பட்ட பொது சொத்துக்களை வாய்மொழி மூலமாக பாகம் ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் சரிதான். அதற்கு பிறகு வருவாய்துறை அதிகாரிகளுடன் சொத்துக்களை அளந்து நான்கு எல்லைகள் கண்டு பிரித்துக்கொண்டோம் என்றால் சரிதான்.

6. 13.02.2003தேதியில் வா.சா.ஆ.5, பி.வா.சா.ஆ.6 ஆவணமான ஈரோடு வருவாய் வட்டாட்சியரின் செயல்முறைகளின்படி வாதி கணேசனுக்கு இந்த வழக்கின் 1 முதல் 4 அயிட்ட சொத்துக்களுக்கு உட்பிரிவு எண் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். எனக்கு பிரிந்த சொத்துக்களுக்கு ரீ.ச.எண்.44/16பி, 9, 11 என உட்பிரிவு எண் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான்.

7. முத்துசாமிக்கு பிரிந்த சொத்துக்களுக்கு ரீ.ச.எண்.45/15பி, 44/16ஏ மற்றும் 44/16எப் என்று உட்பிரிவு எண் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கில் சொல்லியுள்ள 1 முதல் 4 அயிட்ட சொத்துக்களில் எவ்வித பாகமும் இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் 5வது அயிட்ட சொத்துக்களான பெரியசேமூர் கிராம 44/16டி என்பது தென்வடல் பொது வண்டிப்பாதை என்றால் சரிதான். அதனுடைய விஸ்தீரணம் 4 செண்ட் என்றால் சரிதான். தாவா 5வது அயிட்ட சொத்திற்கு வருவாய்துறை ஆவணங்களில் எனது பெயரும், வாதியின் பெயரும் கூட்டாக உள்ளது என்றால் சரிதான்.

8. தாவா 5வது அயிட்ட சொத்தில் பொதுவில் பாதி எனக்கும், மீதமுள்ள பொதுவில் பாதி வாதிக்கும் பாத்தியம் என்றால் சரிதான். ஆரம்பத்தில் வாதி தனது மகனான யுகேஷை மட்டும் பிரதிவாதியாக வைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். வழக்குரையில் சொல்லியுள்ள தாவா 5வது அயிட்ட சொத்து விவரம் சரியானதா என்று சொன்னால் சரிதான். தாவா 5வது அயிட்ட சொத்தில் சொல்லியுள்ள செக்குப்பந்தியும், அதன் அளவுகளும், விஸ்தீரணமும் சரிதான்.

9. வாதி வழக்கு தாக்கல் செய்யும் போது தாவா 5வது அயிட்ட சொத்தில் 4 செண்ட் விஸ்தீரணமுள்ள தென்வடல் பாதையில் பொதுவில் பாதி 2 செண்ட் பாத்தியம் என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். வாதி தனது வழக்குரையில் பத்தி 12ல் தாவா 5வது அயிட்ட சொத்து வாதிக்கும், 1ம் பிரதிவாதிக்கும், எனக்கும் பொதுவில் பாத்தியப்பட்டுள்ளது என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.

10. தாவா 5வது அயிட்ட சொத்து வண்டிப்பாதை என்பதால் பிரிக்கமுடியாத சொத்து என்றால் சரிதான். நீதிமன்றத்தில் எனக்கு அழைப்பாணை வந்தது நான் என் வழக்கறிஞர் மூலம் நீதிமன்றத்தில் ஆஜரானேன். பல வாய்தாக்கள் கொடுக்கப்பட்டு எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் எனக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு ஏற்பட்டது என்றால் சரிதான். 2ம் பிரதிவாதியின் தகப்பனார் முத்துசாமிக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை வாரிசு அடிப்படையில் வா.சா.ஆ.4 அடிப்படையில் கிரயம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

11. அதனால் வாதியும், 1ம் பிரதிவாதியும் சமரச மனு நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். அதன்பின்பு தான் ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து எதிர்வழக்குரை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரை பத்தி 16ல் 1 முதல் 4 அயிட்ட சொத்துகள் வாதிக்கு ஒதுக்கப்பட்டது என்று ஒப்புக்கொண்டேன் என்றால் சரிதான்.

12. 5வது அயிட்ட சொத்து எனக்கும், வாதிக்கும் பொதுவில் பாதி என ஒப்புக்கொண்டேன் என்றால் சரிதான். 1 முதல் 5 வது அயிட்ட

சொத்துக்களில் 2ம் பிரதிவாதிக்கு எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரிதான். தாவா 5வது அயிட்ட சொத்தில் தென்வடல் பொது வண்டிப்பாதையின் கிழமேல் அகலம் 12 அடி என்று சொன்னால் சரிதான். தென்புறத்தில் 12 அடி, வடபுறம் 11 அடி ஆகும்.

13. எனக்கும், வாதிக்கும் பிரிந்த சொத்துக்களில் கிழபுறம் கணேசனுக்கும், மேற்புறம் எனக்கும் பிரிந்தது என்றால் சரிதான். எதிர்வழக்குரையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள மாதிரி வரைபடம் என்னால் தயார் செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டது ஆகும். தாவா 5வது அயிட்ட சொத்து வருவாய் துறை ஆவணங்களான புலவரைபடத்தில் தனியாக உட்பிரிவு செய்து காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான்.

14. எதிர்வழக்குரையில் தாக்கல் செய்த மாதிரிவரைபடத்தில் வருவாய்துறை அதிகாரிகளின் கையொப்பங்கள் இல்லை என்றால் சரிதான். மாதிரிவரைபடம் நானே தயார் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். தாவா 5வது அயிட்ட சொத்தை பொறுத்து எனது எதிர்கோரிக்கையில் செக்குபந்தியோ, அதற்குரிய நீளம், அகலம், விஸ்தீரணம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

15. 2003லிருந்து இன்றுவரை தாவா 5வது அயிட்ட சொத்தில் எவ்வித இடையூறும் இல்லாமல் பொதுவில் அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். 5வது அயிட்ட சொத்தில் உள்ள எனது பொது அனுபவத்தை வாதியோ, 1ம் பிரதிவாதியோ தடுக்கவில்லை என்றால் சரிதான். அதனால் தான் என்னுடைய எதிர்கோரிக்கையில் கோரியுள்ள வழக்குமூலத்தில் வாதி தாவா 5வது அயிட்ட சொத்தை பொறுத்து நான் அனுபவித்து வருவதை தடுத்ததாகவோ, வேறு இடையூறு செய்ததாகவோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

16. என்னுடைய எதிர்கோரிக்கைக்கு வழக்குமூலமே இல்லை என்றால் சரியல்ல. எதிர்கோரிக்கையில் கண்டுள்ள சொத்துக்களுக்கு மதிப்பீடு செய்துள்ள விவரம் தவறானது என்றால் சரியல்ல. செலுத்தப்பட்ட நீதிமன்ற கட்டணமும் தவறானது என்றால் சரியல்ல. தாவா 5வது அயிட்ட சொத்தில்

பொதுவில் பாதி வாதிக்கும், அவரது மகனுக்கும் பாத்தியப்பட்டது என்றும், மீதம் பொதுவில் பாதி எனக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

17. தாவா 5வது அயிட்ட சொத்தில் பொதுவில் பாதி என்று குறிப்பிட்டுள்ளதை தவறுதலாக புரிந்துகொண்டு ஒரு தவறான அனுமானத்தின் பேரில் தான் எதிர்கோரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எதிர்கோரிக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.